**தினத்தந்தி** Date:10.09.2019



காங்கேயம் விவேகானந்தா அகாடமி பள்ளி

## மண்டல அளவிலான கைப்பந்து போட்டியில் சாதனை

காங்கேயம்,செப்.10-

சி.பி.எஸ்.இ.நடத்திய மண்டல அளவிலான கைப்பந்து போட்டிகள் விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியில் நடந்தது.,இந்த போட்டிகளில் தமிழகம், கர்நாடகா, ஆந்திரா, கேரளா, புதுச்சேரி, தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் கலந்து கொண்ட இந்த போட்டிகளில் 195 பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு விளையாடினர். இதில் காங்கேயம் விவேகானந்தா அகாடமி பள்ளியை சேர்ந்தவர்கள் 3 பிரிவுகளில் கலந்து கொண்டு விளையாடினர். இதில் 17 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் பிரிவில் இப்பள்ளி வெண்கலம் பதக்கம் பெற்று சாதனை படைத்தனர். சாதனை படைத்த மாணவர்களை பள்ளி நிர்வாகத் தலைவர் எஸ்.ராமச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள்,பள்ளி முதல்வர் எஸ்.பதமநாபன் ஆகியோர் பாராட்டினார்கள்.

**தினமலர்** Date: 10.09.2019

## வெண்கலம் வென்ற விவேகானந்தா அகாடமி



மண்டல வாலிபால் போட்டியில், வெண்கல பதக்கம் பெற்ற விவேகானந்தா அகாடமி அணி.

திருப்பூர், செப். 10-

மண்டல வாலிபால் போட்டியில், காங்கயம் விவேகானந்தா அகாடமி அணி, வெண்கல பதக்கம் பெற்றது.

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் சி.பி.எஸ்.இ., சார்பில் மண்டல வாலிபால் போட்டி நடந்தது. தமிழகம், கர்நாடகா, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து, 195 பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

அதில், காங்கயம் விவேகானந்தா அகாடமி பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்று மூன்று பிரிவுகளில் களம் கண்டனர். 17 வயது மாணவர் பிரிவில் வெண்கலம் வென்றனர். வெற்றி பெற்ற மாணவர்களை பள்ளி முதல்வர், நிர்வாகிகள், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் பெற்றோர் பாராட்டினர்.